பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
23 10 2024 12 40
புதன்கிழமை பிற்பகல்

<u>தலைப்புச் செய்திகள்</u>

- ஆயுஷ்மான் பாரத் மருத்துவ காப்பீட்டுத் திட்டம் இந்தியாவில் மிகச்சிறந்த சமூக பாதுகாப்பு திட்டங்களில் ஒன்றாக திகழ்கிறது என்று மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.
- ஐக்கிய அரபு எமிட்ரேட்ஸுடன் கடல்சார் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் குறித்து இந்திய கடற்படை தலைமை தளபதி அட்மிரல் தினேஷ் திரிபாதி அந்நாட்டு அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.
- வங்கக்கடலில் உருவாகியுள்ள டானா புயல் ஒடிஸா-மாநிலம் பாரதீப்-யிலிருந்து 560 கிலோமீட்டர் தென்கிழக்கே மையம் கொண்டுள்ளது.
- மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளதை அடுத்து அணையின் நீர்மட்டம் இன்று மீண்டும் 100 அடியை எட்டியது.
- தைவான் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சசிகுமார் முகுந்த் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

[]<<<>>>[]

ஆயுஷ்மான் பாரத் மருத்துவ காப்பீட்டுத் திட்டம் இந்தியாவின் மிகச்சிறந்த சமூக பாதுகாப்பு திட்டங்களில் ஒன்றாக திகழ்கிறது என்று மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பங்கேற்ற அமைச்சர், 63 மில்லியன் பேருக்கு உயர்தர மருத்துவ சிகிச்சைகள் இத்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

மின்னணு கட்டமைப்பு குறித்து பேசிய திருமதி நிர்மலா சீதாராமன், மின்னணு தகவல் தொடர்பு ஒவ்வொரு இந்திய குடிமகனும் பயன்படுத்தும் வலிமையான ஆயுதமாக உள்ளது என்று கூறினார்.

மின்னணு கட்டமைப்பை மக்கள் அதிக அளவில் ஆக்கப்பூர்வமாக பயன்படுத்திய காரணத்தால்தான் விரைவான வளர்ச்சிபெறும் பொருளாதாரங்களில் ஒன்றாக இந்தியா உயர்ந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.,

டிஜிட்டல் கட்டமைப்பு மக்களுக்கு கட்டணமில்லாமலேயே கிடைப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அரசின் நலத்திட்ட உதவிகளை மக்களுக்கு உடனடியாக கொண்டு சேர்ப்பதற்கும், இடைத்தரகர் போன்ற பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவும் நேரடி பண பரிவர்த்தனை திட்டம் மிகவும் உதவிகரமாக இருப்பதாகவும் அவர் கூறினார்.

இந்தியா தலைமையேற்று நடத்திய ஜி-20 உச்சிமாநாட்டில் ஆப்ரிக்க யூனியன் இணைக்கப்பட்டது உலகின் தெற்கத்திய நாடுகள் குரல் கொடுக்க புதிய வாய்ப்பை உருவாக்கி இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

2047-ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்க வேண்டும் என்ற இலக்கை எட்டுவதற்கு கட்டமைப்பு, முதலீடு மற்றும் புத்தாக்க முயற்சிகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து இந்தியா செயல்பட்டு வருவதாகவும் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

[]<<<>>>[]

ஆந்திரபிரதேச மாநிலம் அமராவதியில் நடைபெற்று வரும் ட்ரோன் கருத்தரங்கில் தொழில்முனைவோர், முதலீட்டாளர்கள் மற்றும் தொழில்நுட்ப நிபுணர்கள் ஆர்வமுடன் பங்கேற்று வருகின்றனர்.

இரண்டாவது நாளாக இன்றும் நடைபெறும் இந்த கருத்தரங்கில் பிரதமரின் உற்பத்திக்கான இந்தியா திட்டத்தின் கீழ் ட்ரோன் தொழில்நுட்பத்தில் முதலீடு செய்வதற்கான வாய்ப்புகள் குறித்து விவாதிக்கப்படுகிறது.

இக்கருத்தரங்கில் பேசிய ஆந்திரபிரதேச முதலமைச்சர் திரு சந்திரபாபு நாயுடு, ட்ரோன் தொழில்நுட்ப பூங்காவை அமைக்க கர்னூல் மாவட்டத்தில் 300 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்படும் என்று அறிவித்தார்.

ஆந்திராவில் 35 ஆயிரம் ட்ரோன் பைலட்-களுக்கு பயிற்சி அளிப்பதற்கான திட்டமும் நடைமுறைப்படுத்தப்படும் என்று அவர் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் சிறப்புரையாற்றிய மத்திய சிவில் விமான போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு ராம்மோகன் நாயுடு, இளைஞர்கள் ட்ரோன் தொழில்நுட்பத்தை மேம்படுத்த வேண்டுமென்றும், புதிய வகையிலான ட்ரோன்களை அறிமுகம் செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

[]<<<>>>[]

ஐக்கிய அரபு எமிட்ரேட்ஸ் நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டுள்ள இந்திய கடற்படை தலைமை தளபதி அட்மிரல் தினேஷ் திரிபாதி இரு நாடுகளுக்கும் இடையே கடல்சார் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளார்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸின் பாதுகாப்பு அமைச்சக அதிகாரி திரு மாதக் சலீம் அலி-வுடன் கடல்சார் பாதுகாப்பை மேம்படுத்துவது குறித்து அவர் ஆலோசனை நடத்தினார்.

பாதுகாப்புத் திறனை மேம்படுத்துவது, புலனாய்வு பணிகளில் இணைந்து செயல்படுவது மற்றும் பாதுகாப்புத்துறைக்குத் தேவையான உற்பத்தியில் கூட்டு முயற்சிகளில் ஈடுபடுவது உள்ளிட்ட முக்கிய விஷயங்கள். குறித்து அட்மிரல் திரிபாதி பேச்சு நடத்தினார்.

அந்நாட்டு கடற்படையின் கமாண்டர் ரியல் அட்மிரல் பைலட் சயீத் பின் கம்தான்-வுடன் உயர்மட்ட பேச்சுவார்த்தை நடத்திய அவர், கடல்சார் பாதுகாப்பு குறித்தும், பயிற்சி திட்டங்கள் குறித்தும் விவாதித்தார்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸில் நடைபெறும் இருநாட்டு கூட்டு கடற்படை பயிற்சியிலும் இந்திய கடற்படை தளபதி கலந்து கொள்கிறார்.

இப்பயிற்ச்சிக்காக உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பபட்ட ஐ என் எஸ் விசாகப்பட்டினம் போர்க்கப்பல் அங்கு வரவழைக்கப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

நடப்பு நிதியாண்டின் இறுதிக்குள் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி ஏழு சதவீதத்தை எட்டும் என சர்வதேச செலாவணி நிதியம் மதிப்பீடு செய்துள்ளது.

அடுத்த நிதி ஆண்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி ஆறு புள்ளி ஐந்து சதவீதமாக இருக்கும் என்றும் ஐ எம் எப் தெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

ஜம்மு-கஷ்மீரிலிருந்து 2025-ஆம் ஆண்டு ஹஜ் புனித பயணம் மேற்கொள்வதற்கு விண்ணப்பிப்போர் ஒரு லட்சத் 30 ஆயிரத்து 300 ரூபாய் டெபாஸிட் தொகையாக செலுத்த வேண்டுமென்று ஜம்மு-கஷ்மீர் ஹஜ் கமிட்டி அறிவித்துள்ளது.

இந்த தொகையை செலுத்துவதற்கான கால அவகாசம் இம்மாதம் 31-ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

கிழக்கு மத்திய வங்கக்கடலில் நிலை கொண்டிருந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுமண்டலம் டானா புயலாக இன்று காலை வலுப்பெற்றுள்ளது.

இது ஒடிஸா மாநிலம் பாரதீப்-யிலிருந்து 560 கிலோமீட்டர் தென்கிழக்கே மையம் கொண்டுள்ளது.

மணிக்கு 18 கிலோமீட்டர் வேகத்தில் மேற்கு வடமேற்காக நகர்ந்து வருகிறது.

இது மேலும் தீவிரமடைந்து மேற்கு வடமேற்கு திசை நோக்கி நகர்ந்து அதி தீவிர புயலாக உருவெடுக்கும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஒடிஸாவுக்கும் - மேற்குவங்க மாநிலத்துக்கும் இடையே பூரி பகுதியில் நாளை மாலை கரையைக் கடக்கக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கரையை கடக்கும்போது புயலின்வேகம் 100 முதல் 120 கிலோமீட்டர் வரை இருக்கக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

கர்நாடகாவில் காவிரி நீர்பிடிப்புப் பகுதிகளில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

இதையடுத்து அணையின் நீர்மட்டம் இன்று காலை மீண்டும் 100 அடியை எட்டியது.

நேற்று மாலை வினாடிக்கு 17 ஆயிரம் கன அடியாக இருந்த நீர்வரத்து இன்று காலை நிலவரப்படி 29 ஆயிரத்து 850 கன அடியாக அதிகரித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( சவுண்ட்பைட் - விஜயகுமார் ) --36---- செகண்ட்*

இதனிடையே ஒகனேக்கல் காவிரி ஆற்றில் இன்று நீர்வரத்து வினாடிக்கு 31 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளது.

இதன் காரணமாக சுற்றுலா பயணிகள் அருவி மற்றும் ஆற்றுப்பகுதியில் குளிப்பதற்கும், பரிசல் பயணம் மேற்கொள்வதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( சவுண்ட்பைட் - தண்டபாணி ) --33---- செகண்ட்*

[]<<<>>>[]

தலைநகர் தில்லியில் கடும் குளிர் மற்றும் பனமூட்டம் காரணமாக காற்று மாசு-வின் அளவு தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

தற்போதைய நிலவரப்படி மாற்று மாசு-வின் அளவு 349-ஆக அதிகரித்துள்ளது.

இன்று காலை எட்டு மணி நிலவரப்படி இது 354-ஆக பதிவானது.

ஜாஹாங்கிர் பூரி பகுதியில் காற்றின் தரம் மேலும் மோசமடைந்து 402-ஆக பதிவாகியுள்ளது.

[]<<<>>>[]

பெங்களூருவில் புதிதாக கட்டப்பட்டு வந்த அடுக்குமாடி குடியிருப்பு சரிந்து விழுந்து ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை ஐந்தாக உயர்ந்துள்ளது.

இடிபாடுகளில் சிக்கியுள்ளவர்களை மீட்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

பாபுசபல்யா பகுதியில் கட்டப்பட்டு வந்த இந்த ஆறு மாடி கட்டிடத்தில் 21 தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்டிருந்தபோது நேற்று மாலை இந்த கட்டிடம் சரிந்து விழுந்தது.

தேசிய பேரிடர் மீட்புப்படையினர் மற்றும் மாநில மீட்புப் படையினர் தொடர்ந்து மீட்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

[]<<<>>>[]

தைவான் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சசிகுமார் முகுந்த் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.,

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர் 5-7, 6-3, 7-6 என்ற செட் கணக்கில் ஜப்பானின் **yasutaka uchiyama** -யை வென்றார்.

[]<<<>>>[]

17 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசியக்கோப்பை தகுதிச்சுற்று கால்பந்து போட்டியில் இந்தியா இன்று புருனே அணியை எதிர்கொள்கிறது.

தாய்லாந்தில் இப்போட்டி பிற்பகல் மணி 2-30-க்கு தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

இந்தியா – ஜெர்மனி இடையேயான ஹாக்கிப் போட்டித் தொடர் இன்று புதுதில்லியில் தொடங்குகிறது.

இப்போட்டி பிற்பகல் மூன்று மணிக்கு தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

வளரும் அணிகளுக்கான ஆசியக் கோப்பை டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா-ஏ அணி இன்று ஓமன் அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி **Al amerat** -யில இரவு மணி ஏழு மணிக்கு தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

ப்ரோ கபடி லீக் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் தமிழ்நாடு – புனே அணியையும், குஜராத் - மும்பை அணியையும் எதிர்கொள்கின்றன.

**[]<<<>>>[]**